Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar Case No. **CC.01/2025**

Miscellaneous

Preliminary Register

Deposition of PW- 1 (L.W 1) /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா (எ) ராஜ்கண்ணா | Father Name | : | ரமேஷ் |
| Village | : | கோவிந்தகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஆட்டோ ஓட்டுநர் |
| Religion | : | | Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of June 2025.

1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**<u>முதல் விசாரணை-</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடத்தகராறு இருக்கிறது. கடந்த 18.06.2024ம் தேதி மழை பெய்து கொண்டிருந்தபோது மாலை 5, 5.30 மணியளவில் எங்களுக்கு சொந்தமான வைக்கோல் போரை படுதாவினால் மூடச் சென்ற போது விக்னேஷ்க்கும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது என்னை குச்சிகாரி மகனே என்ற வார்த்தைகளால் திட்டினார். அதன்பிறகு விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாறையால் என்னை தாக்கினார். அதை தடுத்தபோது எனது இடது கையில் கிழிந்த காயம் ஏற்பட்டது. அதன்பின்னர் நான் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு எனக்கு இடது உள்ளங்கை பகுதியில் தையல் போட்டார்கள் மேலும் அதே இடது கை மோதிர விரலில் ஆப்ரேசன் செய்வதற்காக மோடி காப்பீடு திட்டத்தின் கார்டு என்னிடம் இல்லை என்பதால் நான் மருத்துவமனையிலிருந்து தன்னிச்சையாக சிகிச்சையிலிருந்து மோடி காப்பீடு திட்டத்தில் பதிவு செய்வதற்காக திருவாரூர் சென்றுவிட்டேன். நான் மேற்படி மருத்துவமனையில் 4 நாட்களாக உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான்

சிகிச்சையிலிருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.08.2024ம் தேதி மாலை 06.30 மணியளவில் மழைப்பெய்தது என்றும் நான் எனது வைக்கோல் போரை தார்பாய் மூலம் மூடிக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் கொச்சை வார்த்தையால் திட்டி 1வது எதிரி விக்னேஷ் என்பவர் என்னை கல்லால் தாக்கினார் என்றும் அதை நான் இடது உள்ளங்கையால் தடுத்தேன் என்றும் எதிரி ரவி தேங்காய் உரிக்கும் பாறையால் என்னை தாக்கினார் என்றும் அதை நான் தடுத்தபோது எனது இடது கையில் காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எதிரி ரவி எனது அப்பா ரமேஷை கல்லால் தாக்கினார் என்றும் எதிரி விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாரையால் என்னை தாக்கினார் என்றும் கூறியுள்ளேன். மேலும் சாட்சி தாமாகவே அன்றைய தினம் இரண்டு முறை சண்டை நடந்ததாகவும் முதல் சண்டையில் எதிரி ரவி அங்கு இல்லை என்றும் பின்பு நான் போலீசாரிடம் போனில் தகவல் தெரிவித்து போலீசார் அங்கு வந்தபோது ஆஜர் எதிரி 20 நபர்களுடன் வந்து எனது வீட்டிற்கு போலீஸ் எப்படி வரலாம் என்று கூறி எங்கள் குடும்பத்தினர் அனைவரையும் தாக்கினார் என்று போலீஸ் விசாரணையில் கூறினேன் என்றும் அதில் எனக்கும் எனது மனைவிக்கும் காயம் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம் என்றும் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்று கூறுகிறார். மேற்படி 2 சண்டையும் 2 மணிநேரம் நடந்தது என்று சம்பவ இடத்திற்கு வந்த போலீசாருக்கு தெரியும். போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு அதை போலீசார் படித்து காட்டிய பின்புதான் நான் கையொப்பம் செய்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பி.ஏ. வரலாறு படித்துள்ளேன். நான் வலது கை பழக்கம் உள்ளவர்தான் என்றால் சரிதான். எனது வீடும் ஆஜர் எதிரிகளின் வீடும் பக்கத்து வீடு என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் ஆஜர் எதிரி வீட்டிற்கும் இடையே சந்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரி சந்தை ஒட்டி அவர்களது மாட்டுக் கொட்டகை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாட்டு கொட்டகையை ஒட்டி கொல்லை புரம் வரை ஆஜர் எதிரிகள் கம்பி வேலி போட்டுள்ளனர் என்றால் சரிதான். கம்பி வேலிக்கு முன்னால் காம்பவுன்ட் சுவர் உள்ளது என்றால் சரியல்ல. கம்பி வேலிதான் உள்ளது. அளக்காமல் அவர்களே போட்டுள்ளனர். எனது வீடு முடியும் இடத்திலிருந்து 50 அடி தூரத்தில் வைக்கோல் போர் போட்டுள்ளோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று மழையும் காற்றுமாக இருந்தது என்று சொன்னால் மழை வருவது போல் இருந்தது காற்று அடித்தது. காற்று அடித்ததால் தார்பாய் மீது கல்லையும் கயிரையும் கட்டையையும் வைத்தோம் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில், "மழை பெய்து கொண்டிருந்தபோது மாலை 5, 5.30 மணியளவில் எங்களுக்கு சொந்தமான வைக்கோல் போரை படுதாவினால் மூடச் சென்ற போது விக்னேஷ்க்கும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது என்னை குச்சிகாரி மகனே என்ற வார்த்தைகளால் திட்டினார். அதன்பிறகு விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாறையால் என்னை தாக்கினார்" என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூற வில்லை என்றால் சரியல்ல. அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் , "எதிரி ரவி எனது அப்பா ரமேஷை கல்லால் தாக்கினார் என்றும் எதிரி விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாரையால் என்னை தாக்கினார் என்றும் கூறியுள்ளேன். மேலும் சாட்சி தாமாகவே அன்றைய தினம் இரண்டு முறை சண்டை நடந்ததாகவும் முதல் சண்டையில் எதிரி ரவி அங்கு இல்லை என்றும் பின்பு நான் போலீசாரிடம் போனில் தகவல் தெரிவித்து போலீசார் அங்கு வந்தபோது ஆஜர் எதிரி 20 நபர்களுடன் வந்து எனது வீட்டிற்கு போலீஸ் எப்படி வரலாம் என்று கூறி எங்கள் குடும்பத்தினர் அனைவரையும் தாக்கினார் என்று போலீஸ் விசாரணையில் கூறினேன் என்றும் அதில் எனக்கும் எனது மனைவிக்கும் காயம் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம்" என்று புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. எங்களது வைக்கோல்

போர் 10 அடி உயரம் இருக்கும். நான் தார்பாய் கீழே விழாமல் இருக்க மரக்கட்டை வைத்திருந்தேன் என்றும் காற்றில் படுதா சரிந்ததால் மரக்கட்டை கையில் விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக மரக்கட்டை கையில் விழுந்து காயம் ஏற்பட்டதை சாதகமாக பயன்படுத்தி பொய்யாக எதிரியின் மீது புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர் எதிரிகள் உங்களையோ உங்கள் மனைவியையோ தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் தான் உங்கள் மனைவிக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால்தான் நான் நீதிமன்ற சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை..

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.06.26 12:42:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.